DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR
**Case No: CC.42/2021**
Prosecution witness- **PW.1**

Name : Tr.Sasikumar Caste :

Father Name : Calling :

Village : Religion :

Taluk : Age :
Time : 02:50 P.M. to 03:20 P.M.

**(Accused A2 present. A1 absent. Petition u/s.317 Cr.P.C. Filed and allowed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 31.07.2023
31.07.2023 முதல் விசாரணை

நான் தற்போது உதகை வடக்கு வனச்சரகத்தில் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன்.

1) நான் 2020ம் ஆண்டு குன்னூர் வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வந்தபோது 06.11.2020ம் தேதி இரவு சுமார் 08.20 மணியளவில் எனக்கு கீழ் பணிபுரியும் வனவர் திரு.சபரீசன் அவர்கள் சேலாஸ் முதல் கொலக்கம்பை செல்லும் சாலையில் ஏ.வி.டி டீ எஸ்டேட் செல்லும் வழியில் கக்காச்சி கிராமம் அருகே பட்டா நிலத்தில் ஒரு பெண் சிறுத்தை ஒன்று வாகனத்திற்கு பயன்படுத்தும் கம்பி ஒயர் மாட்டி இறந்து கிடப்பதாக கூறினார்.

2) உடனடியாக நானும் பிரிவு வனவர் சபரீசன், குாவல் சுற்று வனக்காப்பாளர் நாகராஜ், கொலக்கம்பை வனச்சுற்று காவலர் லோகேஷ் விக்ரம் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது சிறுத்தை இறந்துகிடந்தது உறுதி செய்யப்பட்டது. உடனடியாக எனது உயரதிகாரியான மாவட்ட வன அலுவலருக்கு தகவல் கொடுத்தேன். அவரின் உத்தரவின் பேரில் வனவர் தலைமையில் இரவு முழுவதும் தனிக்குழு அமைமத்து சிறுத்தைக்கு சுறுக்கு வைத்தது யாரென்று தேடி வந்தோம்.

3) அது சமயம் இறந்த சிறுத்தையினை உடற்கூராய்வு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மறுநாள் 07.11.2020ம் தேதி காலை உடற்கூராய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தபோது அவ்விடத்தில் சந்தேகத்திற்கிடமாக இருந்த இவ்வழக்கின் எதிரிகளை பிடித்து விசாரணை மேற்றொண்டோம். மேலும் எதிரிகள் இருவரையும் அருகிலுள்ள பட்டா நிலத்தின் உரிமையாளரான பிரபு என்பவரிடம் ஏற்கனவே விசாரணை செய்ததில் எதிரிகள்இருவரும் அடிக்கடி இரவு நேரங்களில் சந்தேகத்திற்கிடமாக மேற்படி பட்டா நிலத்திற்கு வந்து செல்வதாக தகவல் சொன்னார்.

4) இது தொடர்பாக எதிரிகள் இருவரிடமும் விசாரணை மேற்கொண்டதில் 2 மாதங்களுக்கு முன்பு வாகனத்திற்கு பயன்படுத்தும் கேபிள் ஒயரை பட்டா நிலத்தில் மாட்டி வைத்ததாகவும் அதில் ஒரு முள்ளம்பன்றி சிக்கி இறந்திருந்ததாகவும் அதை தாங்கள் எடுத்து சமைத்து சாப்பிட்டதாகவும் கூறினார்கள். மேலும் மீண்டும் சுறுக்கு கம்பியை மாட்டி ஏதேனும் விலங்கு மாட்டினால் சாப்பிடலாம் என்ற எண்ணத்தில் மீண்டும் சுறுக்கு கம்பி வைத்ததாக ஒப்புக்கொண்டு எதிரிகள் இருவரும் தனித்தனியாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர். **(1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பு.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது மற்றும் 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பு.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5) அதன் பிறகு இறந்த சிறுத்தையின் உடல் மீது கால்நடை மருத்துவரை வைத்து உடற்கூராய்வு மேற்கொள்ளப்பட்டு உடலை சம்பவ இடத்தில் வைத்து எரியூட்டப்பட்டது. அன்றையதினமே சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் கால்நடை மருத்துவர்கள் கண்ணன், விஜயகுமார் மற்றும் உதவி பயிற்சி வனப்பாதுகாவலர் வெங்கடேஷ்பிரபு மற்றும் உதவி வனப்பாதுகாவலர் பயிற்சி செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில் ஸ்தல மகசர் தயாரித்தேன். **(ஸ்தல மகசர் பு.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சம்பவ இடத்தில் வைத்து 07.11.2020ம் தேதியன்று எதிரிகள் பயன்படுத்திய சுறக்கு கம்பி ஒன்றும் சுண்டச்செடி மரவேர் துண்டு ஒன்றும் மேற்படி

சாட்சிகள் முன்னிலையில் பிடிபொருள் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். **(பிடிபொருள் மகசர் (ஹெச் நமூனா) பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது) (சுறக்கு கம்பி ஒன்று அ.சா.பொ.1 ஆகவும், சுண்டச்செடி மரவேர் துண்டு ஒன்று அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** எதிரிகள் இருவரையும் அலுவகம் கூட்டிவந்து ஓ.ஆர். நம்பர் 4/2020இல் பிரிவு.9, 39(1) and 51 of Wild Life Protection Act-இன்கீழ் வழக்கு பதிவுசெய்தேன். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u> - (எதிரிகள் தரப்பில்)

1) சம்பவம் தொடர்பாக வனவர் சபரீசன் தான் எனக்கு தகவல் கொடுத்தார். அவரை தவிர வேறு யாரும் எனக்கு தகவல் கொடுக்கவில்லை. சபரீசனுக்கு பட்டா நிலத்தின் உரிமையாளர் பிரபு தகவல் சொன்னதாக கூறினார். சிறுத்தை இறந்து கிடந்த பட்டா நிலத்தின் உரிமயாளர் யாரென்று கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியுள்ளார். அந்த பட்டா நிலத்தின் உரிமையாளர் திருமதி.கலாவதி, இந்துமதி மற்றும் கீதா ஆவார்கள்.

2) மேற்படி பட்டா இடத்தை சுற்றி கம்பிவேலி போடப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் என்ன பயிரிடப்பட்டிருந்ததென்றால் புதர்களாக தான் இருந்தது. எதுவும் பயிரிடப்படவில்லை. நாங்கள் சம்பவ இடம் சென்றபோது ஊர்மக்கள் நிறையபேர் அங்கு கூடியிருந்தார்களா என்றால் இரவு நேரமென்பதால் பொதுமக்கள் யாரும் அங்கு இல்லை. மேற்படி பிரபு மட்டும் அங்கு இருந்தார். மறுநாள் காலை நாங்கள் சம்பவ இடத்தில் ஆய்வு செய்தபோது பொதுமக்கள் சுமார் 10 பேர் அங்கு கூடினார்கள். அந்த பொதுமக்களை நான் விசாரித்தேனா என்றால் நான் விசாரித்தேன். அவர்களிடம் எதுவும் வாக்குமூலம் எதுவும் பதிவுசெய்து சாட்சியாக சேர்த்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும் பொதுமக்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும் அதனால் தான் அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

3) சம்பவ இட பட்டா இடத்திற்கருகில் வேறு பட்டா இடங்கள் உள்ளதா என்று விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். இதற்கு முன்பு சம்பவ இடத்தில் சுறுக்கு வலை வைக்கப்பட்டதாக எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை, இதுதான் முதன்முறையாக வைக்கப்பட்டது. எதிரிகள் தான் சுறுக்கு வலை வைத்ததாக என்னிடம் சாட்சிகள் யாரும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, சாட்சி பிரபு ஏற்கனவே எதிரிகளை தான் எச்சரித்து அனுப்பியதாக கூறியிருந்தார். நான் சொல்வதுபோல் பிரபு கூறவில்லை என்றும் இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) நான் சொல்வதுபோல் ஸ்தல மகசர் மற்றும் பிடி மகசர் ஆகியவற்றை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யவில்லை என்றும் அவ்வாறு தயார் செய்திருந்தால் பொதுமக்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளை சந்தேகத்தின் பேரில் அழைத்து வந்து உண்மை குற்றவாளி கிடைக்கப்பெறாததால் எதிரிகளை பொய்யாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR
**Case No: CC.42/2021**
Prosecution witness- **PW.2**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : Tr.Sabareesan | | Caste | : |
| Father Name | : | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |
| Time | : 03:20 P.M. to 03:30 P.M. | | | |

**(Accused A2 present. A1 absent. Petition u/s.317 Cr.P.C. Filed and allowed. Respective accused counsel present)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 31.07.2023

31.07.2023 முதல் விசாரணை

நான் தற்போது தேனி மாவட்டம் வைகை அணை வனவர் பயிற்சி கல்லூரியில் பயிற்சியாளராக பணிபுரிந்து வருகிறேன்.

1) 06.11.2020ம் தேதி குன்னூர் வனச்சரகத்தில் மேலூர் பிரிவு வனவராக பணிபுரிந்தபோது இரவு சுமார் 08.20 மணிக்கு வனக்காப்பாளர் நாகராஜ் என்பவர் எனக்கு போன் மூலம் ஏவிடி எஸ்டேட் பக்கத்தில் கிளிஞ்சாடா ஊரின் அருகே சிறுத்தை ஒன்று சுறுக்கு வலையில் மாட்டி இறந்துகிடப்பதாக தகவல் கொடுத்தார். உடனே நான் வனச்சரகர் அ.சா.1 சசிக்குமார் அவர்களுக்கு தகவல் கொடுத்துவிட்டு வனக்காப்பாளர் நாகராஜ் அவர்களை அழைத்துக்கொண்டு சம்பவ இடம் சென்றேன்.

2) சம்பவ இடத்தை தணிக்கை செய்துவிட்டு சிறுத்தை இறந்துகிடந்ததை உறுதி செய்தேன். அப்போது வனச்சரக அலுவலகர் அச.ா.1 சசிக்குமார் அங்கு வந்தார். அ.சா.1 அக்கம்பக்கம் விசாரித்தபோது வழக்கின் எதிரிகள் மீது சந்தேகமாக இருப்பதாக அக்கம்பக்கம் இருப்பவர்கள் கூறினார்கள். இரவு நேரமென்பதால் உடற்கூராய்வு மேற்கொள்ளமுடியவில்லை. எனவே ஒரு குழுவாக சம்பவ இடத்தில் பாதுகாப்பு பணியில் இருந்தோம்.

3) மேற்கண்ட சந்தேக நபர்களை தேடி வந்தோம். மறுநாள் காலை வனக்காப்பாளர் நாகராஜ் அவர் குழுவுடன் எதிரிகளை கண்டுபிடித்து வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்து வந்து விசாரணை செய்தபோது ிரிகள் ஏற்கனவே சம்பவ இடத்தில் சுறுக்கு வைத்தபோது முள்ளம்பன்றி மாட்டியதாகவும் மீண்டும் வனவிலங்குகள் சிக்கினால் சாப்பிடலாம் என்று சுறக்கு வைத்ததாக கூறி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அ.சா.1 சசிக்குமார் பதிவுசெய்தார். 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை நான் பதிவுசெய்தேன்.

4) 07.11.2020ம் தேதி சம்பவ இடத்தில் வைத்து ஸ்தல மகசரை வனக்காப்பாளர் தயாரித்தார். அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். ஹெச் நமூனாவை நான் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u> - (எதிரிகள் தரப்பில்)

ஸ்தல மகசரை வனக்காப்பாளர் நாகராஜ் தயார் செய்தார். ஹெச் நமூனாவை நான் தான் தயார் செய்தேன். அதில் எதிரிகள் கையொப்பம் செய்தனர். நான் சொல்வதுபோல் ஹெச்நமூனாவை சம்பவ இடத்தில்வைத்து நான் தயார் செய்யவில்லை என்றும் அலுவலகத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால்ச ரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை அலுவலகத்தில் வைத்து தான் பதிவுசெய்தோமா என்றால் ஆம்.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.42/2021**
Prosecution witness- **PW.3**

| | | | |
|---|---|---|---|
| Name | : Tr.Nagaraj | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 03:30 P.M. to 03:35 P.M. | | |

**(Accused A2 present. A1 absent. Petition u/s.317 Cr.P.C. Filed and allowed. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 31.07.2023
31.07.2023 முதல் விசாரணை

நான் தற்போது உதகை வடக்கு வனச்சரக காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன்.

1) 06.11.2020ம் தேதி குன்னூர் வனச்சரக அலுவலகத்தில் உலிக்கல் காவல் பகுதியில் வனக்காப்பாளராக பணியிலிருந்தபோது இரவு சுமார் 08.15 மணிக்கு பிரபு என்பவர் எனக்கு போன் செய்து சுறுக்கு வலையில் சிறுத்தை ஒன்று மாட்டி ஏவிடி எஸ்டேட் அருகே இறந்துகிடப்பதாக கூறினார். உடனே நான் உயரதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு அ.சா.1, 2 சாட்சிகளுடன் சேர்ந்து சம்பவ இடம் சென்று சிறுத்தை இறந்திருப்பதை உறுதி செய்தோம்.

2) விசாரணையின் போது சாட்சி பிரபு என்பவர் எதிரிகள் அடிக்கடி அந்த இடத்திற்கு வந்து செல்வதாகவும் அவர்கள்மீது சந்தேகம் இருப்பதாகவும் கூறினார். மறுநாள் காலை எதிரிகளை பிடித்து விசாரித்தபோது தாங்கள் தான் சுறுக்கு வலை வைத்ததாக ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகசரில் இறுதியாக கண்டுள்ளது எனது கையொப்பம் தான்.

<u>குறுக்கு விசாரணை</u> - (எதிரிகள் தரப்பில்)

1) தகவல் கிடைத்த பின்பு சம்பவ இடத்திற்கு எனது உயரதிகாரிகளுடன் சேர்ந்து தான் சென்றேனா என்றால் ஆம். ஸ்தல மகசரில் சம்பவ இடத்தில் வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன். அதை வனச்சரக அலுவலர் தயார் செய்தார். அதில் எழுதியிருந்த விவரம் எனக்கு தெரியும்.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

/ஒப்பம்/R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்